**கவனிக்க**.- 2008.02.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1536 - 2008 පෙබරවාරි 08 වැනි සිකුරාදා - 2008.02.08

1536 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 104 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 106 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 107 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 116 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, பெப்புருவரி 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, பெப்புருவரி 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2008 இன் இல. 64*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2522.*

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் புஸ்ஸேவலகே அர்ஜுன நிஷாந்த த சில்வா, இகாப (உ/62320)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

2-209

---

*2008 இன் இல. 65*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2530.*

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) அமரபதி முதலிகே நீல் சமன்ஜித் விஜேசிரிவர்தன, இஇவைப (உ/63758)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

2-211

---

*2008 இன் இல. 66*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2521.*

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் சக்கலசூரிய முதியன்சேலா சேனக்க பண்டார சக்கலசூரிய, இசைப (உ/63597)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

2-210

---

*2008 இன் இல. 67*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2480*

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

**அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கஸ்தூரி ஆரச்சிகே ஜயதிஸ்ஸ, இபஉப (உ/63268)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.03.28.

2-276

*2008 இன் இல. 68*

*டீ/22/என்வை/413.*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வுபெறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இலங்கை கடற்படையின் நிரந்தரப்படையிலிருந்து ஓய்வுபெறுகிறார் :-

கொமதோர் தொம்மாதுர மனில் ஜயந்தி மெண்டிஸ், பீஎஸ்சீ, இகப-என்ஆர்எக்ஸ் 0116

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.10.11.

2-215

---

*2008 இன் இல. 69*

*டீ/ஆர்எவ்/824/என்வை/02/03*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

2007, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக கொமாண்டர் (சிபொ) ஆக :

லெப்டினன்ட் கொமாண்டர் (சிபொ) டிலான் சேனாநாயக்க, இகப-என்ஆர்சீ 0668

லெப்டினன்ட் கொமாண்டர் (சிபொ) மதகொட ஜயசிங்கலாகே ரன்ஜன் ரவீந்திர மதகொட, இகப-என்ஆர்சீ 0670

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.11.12.

2-214

---

*2008 இன் இல. 70*

*டீ/ஆர்எவ்/824/என்வை/01/06.*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

2007, ஓகத்து மாதம் 04 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :

லெப்டினன்ட் வீரசிங்க ஓகந்தகே நலிந்த குமார, என்ஆர்எக்ஸ் 1041, இகப

2007, ஓகத்து மாதம் 11 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :

லெப்டினன்ட் நிஸ்ஸங்க ஆரச்சிலாகே ரொஷான் சமிந்த நிஸ்ஸங்க, என்ஆர்எக்ஸ் 1039, இகப

2007, ஓகத்து மாதம் 13 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :

லெப்டினன்ட் திசாநாயக்க முதியன்சேலாகே சந்திர லங்காநாத்த பண்டார திசாநாயக்க, என்ஆர்எக்ஸ் 1074, இகப

2007, ஓகத்து மாதம் 13 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (பொ) ஆக :

லெப்டினன்ட் (பொ) சசிந்து நாலக்க த சில்வா அபேசூரிய, என்ஆர்ஈ 1081, இகப

2007, ஓகத்து மாதம் 18 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :

லெப்டினன்ட் ஜனக்க பண்டார ஹெட்டிஆரச்சி, என்ஆர்எக்ஸ் 1050, இகப

2007, ஓகத்து மாதம் 27 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மிபா) ஆக :

லெப்டினன்ட் (மிபா) சிவநெத்தி பிரதீப் நலீன் குமார, என்ஆர்ஆர் 1088, இகப

2007, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :

லெப்டினன்ட் (கவீ) ஹிட்டிநாயக்க முதியன்சேலாகே பிரசன்ன சமேத பண்டார ஹிட்டிநாயக்க, என்ஆர்பீ 1089, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, நவெம்பர் 12.

2-275

டீ/டீஜஎஸ்சி/என்வை/07/98.

**இலங்கைத் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

2007, ஒகத்து மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கை கடற்படை நிரந்தரப்படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் (கவீ) தொன் நாணாயக்காரவசம் ஞானசிங்க ஓபாத்த, என்ஆர்ஜீ 1027, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.10.08.

2-212

2008 இன் இல. 71

டீ/ஆர்எவ்/ஆர்ஈசீடீ/914/என்வை.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து விடுவித்தல்

2007, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கை கடற்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து விடுவித்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் (பொ) வீரதுங்க ஆரச்சி பிரதீப் கபில நிஷாந்த, என்ஆர்ஈ 1806, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.10.08.

2-213

# அரசாங்க அறிவித்தல்கள்

## பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

2006.01.04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பேரில் அரசாங்க முகாமை திணைக்களத்தால் கட்டிட திணைக்களத்தின் பின்குறிப்பிடப்படும் பதவிகள் திருத்தப்பட்டுள்ளன :

| திணைக்களம் | பதவிப்பெயர்கள் | திருத்திய பதவிகளின் பெயர்கள் |
|---|---|---|
| கட்டிடங்கள் | பணிப்பாளர் | பணிப்பாளர் நாயகம் |
| கட்டிடங்கள் | மேலதிகப் பணிப்பாளர் | பணிப்பாளர் பொறியியலாளர் (கட்டிடங்கள்) |

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1984, மே மாதம் 7 ஆந் திகதிய 269/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1984, ஏப்பிறல் 30 ஆந் திகதிய பொறியியலாளர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு பதிலீடாக 1988.06.07 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் உப அட்டவணையில் பொதுத் தொகுதி I (கட்டிடங்கள்) இன்கீழ் உள்ள பதவிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி மேற்குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

டி. திசாநாயக்க,
செயலாளர்.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

2-245

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**

அரச சேவை சேமலாப நிதியம்

**வருடாந்தக் கணக்கறிக்கை - 2004**

***முகாமைத்துவ சபையின் மீளாய்வு***

**நோக்கம்.-** ஓய்வூதியமுரித்தற்ற மாதாந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு சேமலாப முறையொன்றை உருவாக்குவது நிதியத்தின் நோக்கமும் இலக்குமாகும். 2003.01.01 ஆந் திகதி முதல் ஓய்வூதியம்பெறாத மற்றும் எந்தவிதமான சமூக பாதுகாப்புமற்ற அனைத்து அரச ஊழியர்களுக்கும் இந்நிதியத்தின் பயன்பாடுகளைப் பெறுவதனை விரிவுபடுத்தலாகும்.

2. **தொழிற்பாடுகள்.-** நிதியத்தின் பிரதான செயற்பாடுகளாவன :

(அ) பல்வித அரச திணைக்களங்களிலும் வெளிநாட்டு தூதுவராலயங்களிலும் பணிபுரியும் ஓய்வூதியமுரித்தற்ற மாதாந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து 8& த்தை அங்கத்துவப் பணமாக நிதியத்தில் வைப்பிலிடல்.

(ஆ) அவ்வாறு அறவிடப்படுகின்ற நிதி சம்பந்தமாக அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், அத்தகவல்களைப் பேணுதல் மற்றும் அங்கத்துவப் பணத்தை உரிய முறையில் நிதியத்தில் வைப்பிலிடல்.

(இ) ஒவ்வொரு வருட இறுதியிலும் அங்கத்தவர்களின் கணக்குகளில் உள்ள மீதிகளை அவர்களுக்கு அறிவித்தலும் அவர்களின் அங்கத்துவம் முடிவடைந்தவுடன் அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை துரிதமாக வழங்குதல்.

(ஈ) நிதியத்துக்குச் சேரும் மற்றும் மேலதிகமாகவுள்ள நிதியை அங்கத்தவர்களுக்கு கூடுதலான வட்டியை வழங்கக்கூடியவாறு அரச காப்புறுதிப்பத்திரங்களில் முதலீடு செய்தலும் வருட இறுதியில் அங்கத்தவர்களின் கணக்குகளுக்கு வட்டி ஒதுக்கீடு செய்தலும்.

3. **நிதிக் கண்காணிப்பு.-** மீளாய்வாண்டுக்குள் நிதியத்துக்கு கிடைத்த கட்டாய அங்கத்துவப் பணம் மற்றும் அரச செலுத்துகைகளும் முறையே ரூபா 225,527,179 உம் ரூபா 251,412,810 உம் ஆகியதுடன் 2003 ஆம் ஆண்டுக்குள் அவை முறையே ரூபா 168,148,320 உம் ரூபா 243,607,780 உம் ஆக இருந்தன. நிதியத்தின் நிதி வளங்களை முதலீடு செய்வதனால் வருடத்தில் பெற்ற மொத்த வருமானம் ரூபா 978,461,203 ஆவதுடன் கடந்த வருடத்தில் இது ரூபா 877,860,313 ஆக இருந்தது. இதன் வளர்ச்சி 11.46& ஐக் காட்டுவதுடன் நிதியத்தை பேணுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிபாலனச் செலவுகள் ரூபா 3,930,488 ஐக் கழித்த பின்னர் செலவை மிஞ்சிய வருமானமாக ரூபா 974,530,714 ஆக அமைந்ததால் அங்கத்தவர்களுக்கு செலுத்த முடியுமான வட்டி சதவீதம் 10.34& ஆக அமைந்தது. எவ்வாறாயினும் இவ்வட்டி சதவீதம் கிட்டிய கால் பெறுமதிக்கு 10.25& ஆக மட்டந்தட்டப்பட்டது. கடந்த வருடத்தில் இது 10.51& ஆகும். அதாவது ரூபா 966,279,838 தொகையைக் கழித்த பின்னர் ரூபா 8,250,877 மேலதிகம் ஏற்பட்டது. இது பொதுக் கணக்குக்கு மாற்றப்பட்டது.

4. **கணக்கீட்டுக் கொள்கைகள் :**

(அ) *கணக்கீட்டு அடிப்படை.-* அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் இறக்கக் கொள்கைக்கேற்ப, 1942 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அ. ஊ. சே. நி. கட்டளைச் சட்டத்தின்கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

(ஆ) *கட்டிட வாடகை, மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்கள்.-* ஓய்வூதியத் திணைக்களத்தால் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டிட வாடகை, மின் கட்டணம் மற்றும் நீர்க்கட்டணம் என்பன 1993 ஆம் ஆண்டு முதல் நிதியத்தினால் கொடுப்பனவு செய்ய சபையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. ஓய்வூதியத் திணைக்களத்தால் கொடுப்பனவு செய்யப்பட்ட இச்செலவுகள் பின்வருமாறு பகுத்தீடு செய்யப்பட்டுள்ளது :

| *செலவுகள்* | *அடிப்படை* |
|---|---|
| கட்டிட வாடகையும் மின்சாரமும் | நிலப்பரப்பு |
| நீர் விநியோகம் | ஆளணி எண்ணிக்கை |

(இ) *நிலையான சொத்துக்களும் அழியும் ஒதுக்கீடுகளும் :*

(1) நிலையான சொத்துக்கள் கொள்விலைக்கு பெறுமதியிடப்பட்டுள்ளது.

(2) நிலையான சொத்துக்களுக்கு கொள்வனவு செய்த ஆண்டில் பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படாததுடன் விற்பனை செய்யும் ஆண்டில் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு செய்யப்படும்.

(3) குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும். கீழ்வரும் சதவீதங்களில் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன :

| | சதவீதம் |
|---|---|
| கணனி இயந்திரங்கள் | 15& |
| அலுவலக உபகரணங்கள் | 10& |
| தளபாட இணைப்புக்கள் | 10& |

(ஈ) *வருமானத்தை இனங்காணல்.*-வட்டி வருமானம்

(உ) *முதலீடுகள்.*- நிலுவைத் திகதிக்கு மூலதனங்களின் பெறுமதி விற்பனைப் புறழ்வு மதிப்பிற்கேற்ப கணிக்கப்படுவதோடு வியாபாரப் பெறுமதியும் கணிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

5. **நிதிப் பிரகடனம் பற்றிய குறிப்புகள் :**

| | 2004 | 2003 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 1. வட்டி வருமானம் | 942,581,543 | 836,855,571 |
| ஆண்டுக்குள் கிடைத்த வட்டி | 1,299,202 | |
| | 943,880,745 | |
| *கழி :* | | |
| சனவரி 1 ஆந் திகதிக்குக் கிடைக்க வேண்டிய வட்டி | 303,352,468 | 262,347,726 |
| கிடைக்கப்பெற்ற வருடத்துக்குரிய வட்டி | 640,528,277 | 574,507,845 |
| *கூட்டு :* | | |
| திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய வட்டி | | |
| 1. ரூபாக் கடன் | 188,423,020 | 254,667,004 |
| 2. திறைசேரிப் பற்றுச்சீட்டுக்கள் | 49,190,234 | 34,372,928 |
| 3. திறைசேரிப் பிணைப்பத்திரங்கள் | 100,319,671 | 14,312,536 |
| | 337,932,925 | 303,352,468 |
| வருடத்துக்குரிய வட்டி | 978,461,202 | 877,860,313 |

2. **நிலையான சொத்துக்கள் :**

| | தளபாடங்களும் பொருத்துகளும் | அலுவலக உபகரணங்கள் | கணனி உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானப் புறழ்வு | | | | |
| 2004.01.01 ஆந் திகதிய நிலுவை | 48,946 | 631,577 | 385,282 | 1,065,805 |
| 2004.12.31 ஆந் திகதிய நிலுவை | 48,946 | 631,577 | 385,282 | 1,065,805 |
| மொத்தத் தேய்வு | | | | |
| 2004.01.01 ஆந் திகதிய நிலுவை | 19,673 | 268,329 | 156,283 | 444,285 |
| வருடத்துக்கான அறவீடு | 2,927 | 36,325 | 34,350 | 73,602 |
| | 22,600 | 304,654 | 190,633 | 517,887 |
| 2004.12.31 ஆந் திகதிக்கு தேறிய பெறுமதி | 26,346 | 326,923 | 194,649 | 547,918 |
| 2003.12.31 ஆந் திகதிக்கு தேறிய பெறுமதி | 29,273 | 363,248 | 228,999 | 621,520 |

3. **முதலீடுகள்**.- இலங்கை மத்திய வங்கியில் செய்துள்ள முதலீடுகளின் கொள்விலை ரூபா 9,985 மில்லியன் ஆவதுடன் சந்தை விலை ரூபா 10,306 மில்லியன் ஆகும்.

4. **கிடைக்கவேண்டிய அரச பங்களிப்புப் பணம்**.- திரட்டிய நிதியத்திலிருந்து கட்டாய பங்களிப்பான 8& அளவுக்கு நிகரான அரசிடம் இருந்து பெறப்படவேண்டிய 12& என்பதும் வருட இறுதியில் கிடைக்கப்பெறாத வீதமும் இங்கு நிர்ணயிக்கப்படுகின்றது.

5. **செம்மையாக்கல் கணக்கு**.- இக்கணக்கில் காட்டப்பட்டுள்ளவை ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட பிழையான வரவுகளும் பிழையான செலவுகளுமாகும். இவ்வாறான பிழையான வரவுகளும் பிழையான செலவுகளும் அத்திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் அவர்கள் அதனை திருத்தியபின்னர் இம்மீதிகள் செம்மையாக்கப்படுகின்றன.

6. **முழு நிதியம்**.- அங்கத்துவ நிதிக்கான வைப்புக்களின் நிலுவைகள் இதிலிருந்து நிரூபணமாவதோடு இதனுள் கட்டாய அங்கத்துவப்பணம், தன்னார்வ அங்கத்துவப் பணம், அரச அங்கத்துவப் பணம் மற்றும் இவற்றிற்குரிய வட்டி என்பன உள்ளடங்குகின்றன.

7. **பொது மையம்**.- கிட்டிய கால் சதவீத வட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய மீதி இக்கணக்குகளில் காட்டப்படுகின்றது. கிட்டிய கால் சதவீத வட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய மீதியான ரூபா 8,250,877 இக்கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. 31.12.2004 இல் மீதி ரூபா 13,861,011 ஆக இருந்தது.

8. **செலுத்தவேண்டிய செலவுகள்**.- மீளாய்வாண்டில் திரட்டிய நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் இங்கு தெளிவாகிறதுடன் ஓய்வூதிய திணைக்களத்தினால் மின்சாரம் மற்றும் நீர் சார்பாக செலவுசெய்யப்பட்ட ரூபா 161,294 தொகையும் இதற்குள் அடக்கப்பட்டுள்ளது.

| | 2004 | 2003 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| மின்சாரமும் நீரும் | 161,294 | 145,274 |
| நிர்வாகச் செலவுகள் | 3,405,623 | 3,260,349 |
| | 3,566,917 | 3,405,623 |

எஸ். என். ஹபுஆராச்சி,
அரச ஊழியர் சேமலாப நிதியம்,
முகாமைத்துவ சபையின்
செயலாளரும் கணக்காளரும்.
2006, யூலை 21.

கே. ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமும்
அரச ஊழியர் சேமலாப நிதிய
முகாமைத்துவ சபையின் தலைவரும்.
2006, யூலை 31.

**அரச ஊழியர் சேமலாப நிதி**.- 2004.12.31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் பற்றிய கணக்கு :

| | 2004 | | 2003 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சனவரி 1 ஆந் திகதிய நிலுவை | | 632,442,588 | | 1,556,720,072 |
| **பெறுவனவு** | | | | |
| கட்டாய அங்கத்துவம் | 225,527,179 | | 168,148,320 | |
| அரச பங்களிப்புப் பணம் | 251,412,810 | | 243,607,780 | |
| வட்டி | 942,581,543 | | 836,855,571 | |
| பிழையான வைப்பு | 92,130 | | 1,591,590 | |
| காசாக்கப்பட்ட முதலீடுகள் | 5,406,270,275 | | 2,677,695,391 | |
| | 6,825,883,937 | | 3,927,898,652 | |
| கழிக்கப்பட்டது : | | | | |
| **கொடுப்பனவு** | | | | |
| கட்டாய அங்கத்துவம் | 40,598,357 | | 44,198,978 | |
| அரச அங்கத்துவம் | 32,040,617 | | 15,325,088 | |
| செலுத்தப்படாத பங்களிப்புப் பணத்தைத் திரட்டிய நிதியில் வைப்புச் செய்தல் | 15,728,015 | | 46,386,224 | |

| | 2004 | | 2003 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிருவாகச் செலவினம் | 3,395,592 | | 3,063,162 | |
| கணக்காய்வுச் செலவினம் | - | | 786,160 | |
| பிழையான வைப்பு | 5,840,104 | | 1,597,133 | |
| மூலதனச் சொத்துக்களை தேர்ச்சி பெற | - | | 491,129 | |
| செவ்வையாக்கம் (வரவு-செலவு) | | | | |
| மூலதனம் | 7,037,386,602 | | 4,740,328,262 | |
| | | (309,105,350) | | (924,277,484) |
| திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி | | 323,337,238 | | 632,442,588 |

அரச சேவை ஊழியர் சேமலாப நிதிக்கணக்கு 2004

அரச ஊழியர் சேமலாப நிதி.- 2004.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கான வரவுசெலவுக் கணக்கு

| | குறிப்பு | 2004 | | 2003 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 1 | | | | |
| வட்டி | | | 1,023,565,692 | | 904,797,699 |
| கழிக்கப்பட்டது (வட்டிக்கான வரி) | | | 45,104,489 | | 26,937,386 |
| | | | 978,461,203 | | 877,860,313 |
| *கழிக்கப்பட்டது* : செலவுகள் | | | | | |
| மின்சாரம் | | 112,209 | | 106,356 | |
| நீர் விநியோகம் | | 49,085 | | 38,918 | |
| தனிப்பட்ட சம்பள/வேதனங்கள் | | 3,135,234 | | 2,887,695 | |
| பிரயாணச் செலவுகள் | | 860 | | 12,614 | |
| காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | | 33,525 | | 81,210 | |
| பழுதுபார்த்தலும் பேணலும் | | 25,555 | | 14,441 | |
| போக்குவரத்தும் புகையிரத ஆணைச்சீட்டுக்களும் | | 177,630 | | 155,643 | |
| கணக்காய்வுச் செலவு | | 300,000 | | 262,086 | |
| நிலையான சொத்துக்களின் தேய்வு | | 73,602 | | 82,754 | |
| சீருடை | | 500 | | 2,938 | |
| தபாற் செலவு | | 21,858 | | 17,230 | |
| ஏனைய செலவினங்கள் | | 430 | 3,930,488 | 12,170 | 3,674,055 |
| செலவை மிஞ்சிய வருமானம் | | | 974,530,714 | | 874,186,258 |
| கழிக்கப்பட்டது : பிழையான வரவு செலவு | | | - | | 10,000,000 |
| நீக்கக்கூடிய வரவு | | | 974,530,714 | | 864,186,258 |
| அங்கத்தவர்களுக்கு வட்டி வழங்கல் | | | | | |
| கட்டாய அங்கத்துவப் பணம் | | 386,542,332 | | 344,270,846 | |
| தன்னார்வ அங்கத்துவப் பணம் | | 965,066 | | 894,664 | |
| அரச அங்கத்துவப் பணம் | | 578,772,440 | 966,279,838 | 517,800,825 | 862,966,335 |
| பொது மையக் கணக்கிற்கு மாற்றப்பட்டது | | | 8,250,877 | | 1,219,923 |

அரச சேவை ஊழியர் சேமலாப நிதிக்கணக்கு 2004

*அரச ஊழியர் சேமலாப நிதி.– 2004.12.31 ஆந் திகதிக்குரிய ஐந்தொகை*

| *சொத்துக்கள்* | *குறிப்பு* | *2004* | | *2003* | |
|---|---|---|---|---|---|
| | | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| **நிலையான சொத்துக்கள்** | 2 | | | | |
| தளபாடங்கள் | | 26,346 | | 29,273 | |
| அலுவலக உபகரணங்கள் | | 326,923 | | 363,248 | |
| கணனிகள் | | 194,649 | 547,918 | 228,999 | 621,520 |
| மூலதனம் | 3 | | 9,985,171,722 | | 8,352,756,193 |
| **அசையும் சொத்துக்கள்** | | | | | |
| கிடைக்கவேண்டிய மூலதன வட்டி | | 337,932,925 | | 303,352,468 | |
| கிடைக்கவேண்டிய அரச அங்கத்துவம் | 4 | 90,490,948 | | 3,990,610 | |
| செம்மைப்படுத்திய கணக்கு | 5 | 8,372,072 | | 2,624,097 | |
| திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கணக்கிலுள்ள மீதி | | 323,337,238 | 760,133,183 | 632,442,588 | 942,409,763 |
| முழுச்சொத்துக்கள் | | | 10,745,852,823 | | 9,295,787,476 |
| **சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | | | |
| முழு நிதியம் | 6 | | | | |
| கட்டாய அங்கத்துவப் பணம் | | 4,263,494,975 | | 3,692,023,821 | |
| தன்னார்வ அங்கத்துவப் பணம் | | 10,380,345 | | 9,415,279 | |
| அரச அங்கத்துவப் பணம் | | 6,453,983,748 | 10,727,859,068 | 5,585,066,792 | 9,286,505,892 |
| **மையம்** | | | | | |
| முதலீட்டு மையம் | | 3,790 | | 3,790 | |
| பொது மையம் | 7 | 13,861,011 | 13,864,801 | 5,610,134 | 5,613,924 |
| **நிலையற்ற பொறுப்புகள்** | | | | | |
| செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | | 562,037 | | 262,037 | |
| செலுத்தவேண்டிய நிறுவனச் செலவுகள் | 8 | 3,566,917 | 4,128,954 | 3,405,623 | 3,667,660 |
| **மொத்த சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | 10,745,852,823 | | 9,295,787,476 |

எஸ். என். ஹபுஆராச்சி,
அரச ஊழியர் சேமலாப நிதியம்,
முகாமைத்துவ சபையின்
செயலாளரும் கணக்காளரும்.
2006, யூலை 21.

கே. ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமும்
அரச ஊழியர் சேமலாப நிதிய
முகாமைத்துவ சபையின் தலைவரும்.
2006, யூலை 31.

பீவை/ஜே/பீஎஸ்பிஎவ்/2004/2006/10 2007, பெப்புருவரி 12

ஓய்வூதியப் பணிப்பாளர்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2004, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2004, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் கணக்காய்வு அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 621) 24 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

1.2 **கணக்காய்வின் நோக்கெல்லை.**- இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

2. **கணக்குகள் :**

2.1 **கணக்குகளின் சமர்ப்பணம்.**- 836 ஆம் இலக்க மற்றும் 1977, ஓகத்து 16 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியம் தொடர்பான வருடாந்த கணக்கு கூற்று உரிய ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஏப்பிறல் 30 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2004, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் கணக்குகள் கணக்காய்விற்காக 1 ஆண்டும் 3 மாதகால தாமதத்தை அடுத்து 2006, ஓகத்து 7 அன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2 **கணக்காய்வு அபிப்பிராயம்.**- இவ்வறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல. 4 இல் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கும் இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் இதன் மூலம் 2004, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் தொழிற்பாட்டு விளைவுகளையும் அனைத்துப் பொருண்மையான அம்சங்களையும் நியாயபூர்வமாக வெளிப்படுத்தக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.3 **கணக்குகள் மீதான கருத்துரைகள் :**

2.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்.- பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன :

(அ) மீளாய்வாண்டிற்காக செலுத்தவேண்டிய முதலீட்டு வருமானத்தின் மீதான வரித்தொகையான ரூபா 12,366,029 மீளாய்வாண்டிற்கான கணக்குகள் தயாரிக்கையில் கருத்தில் கொண்டிராததுடன் முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 10,860,504 ஆன முதலீட்டு வருமானத்தின் மீதான வரி ஆண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 509,340 ஆக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் வருடாந்த மிகை இதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2003 ஆம் ஆண்டின்போது பெறப்பட்டிருந்த ரூபா 4,584,060 ஆன முதலீட்டு வருமானம் மீளாய்வாண்டின் பெறுவனவாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. அவ்வருமானத்திற்கு உரித்தாக செலுத்தப்பட்ட ரூபா 509,340 ஆன வரி, ஆண்டின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் ஆண்டின் மிகை இதே தொகையால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1990, சனவரி 1 இல் உள்ளவாறு தவறான வரவு மற்றும் செலவு ஒன்றோடொன்று தீர்க்கப்பட்ட மீதி, தவறான செலவாக ரூபா 2,794,066 ஆனதுடன் 1990 முதல் 2004 வரை சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளின்படி வரவு மற்றும் செலவாக வெவ்வேறாக கூட்டுத்தொகை முறையே ரூபா 52,450,286,664 உம் ரூபா 52,439,120,527 மாகக் காணப்பட்டது. இது தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிராததுடன் காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இம்மீதிகள் கணக்குகளில் 2004, திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மற்றும் செலவு மீதிகள் ஒன்றோடொன்று தீர்க்கப்பட்டு ரூபா 8,372,071 ஆன தவறான வரவு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. தவறான வரவு மற்றும் செலவு மீதிகளைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

2.3.2 *வரவு செலவுக் கட்டளைப் பெறுவனவு.*- 1997, யூலை 31 ஆந் திகதிய 1/97 ஆம் இலக்க ஓய்வூதிய திணைக்களத்தின் அரச சேவை சேமலாப நிதியச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் நிதியத்திற்கு வரவு அல்லது செலவு வைக்கப்படும் தொகை தொடர்பான அறிவித்தல் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் நிதியச் செயலாளருக்கு குறித்த நிறுவகத்தால் அனுப்பிவைக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான அவ்வறிவித்தல் 2 நிறுவகங்களிடம் இருந்து மாத்திரமே பெறப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டின்போதும் இக்கட்டளையைப் பெறுவது தொடர்பாக ஆக்கபூர்வமான மற்றும் திறமையான நடைமுறை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 *பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு.*- விபரமான அறவீட்டுப் பதிவேடு ஒன்று நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும், அவ்வப்போது உறுதிசெய்யப்பட்டு அனுப்பிவைக்கப்படும் அறவீட்டு அறிக்கையைச் சார்ந்தே பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. அதேவேளை அக்கொடுப்பனவுகளின் துல்லியத் தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதிருந்தது.

2.3.4 *கணக்காய்விற்கான சான்றுகளின்மை.*- மாகாண சபைக்குரிய 289 நிறுவகங்கள் இருந்தபோதிலும், 2004 ஆம் ஆண்டிற்குரிய பங்களிப்புத் தொகை பெறுவது தொடர்பான ஆய்விற்காக 57 கோவைகள் மாத்திரமே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. பங்களிப்பைச் செலுத்தவேண்டிய நிறுவகங்களின் எண்ணிக்கையும் பெயரளவில் வெவ்வேறாகப் பிரித்து அறியக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் பங்களிப்பைச் செலுத்திய நிறுவகங்கள் தொடர்பாக மாத்திரம் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன. இதனால் பெறவேண்டிய பங்களிப்புத்தொகை அளவும் இதற்குரிய பெறவேண்டிய மிகையூதியமும் எவ்வளவு என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3.5 *பங்களிப்பைச் செலுத்துகையில் செலுத்தப்பட்ட வட்டி.*- மாகாண சபைக்குரிய நிறுவனங்களினூடாக பங்களிப்புத் தொகையும் ஊக்குவிப்புத் தொகையும் அனுப்பப்படுகையில் பெரும்பாலும் காலதாமதம் நிலவி இருந்தமை கணக்குகளின் ஆய்வின்போது அவதானிக்கப்பட்டது. எனினும், மீளச் செலுத்துகையில், அப்பணம் பெறப்பட்ட திகதிகள் கருத்திற்கொள்ளப்படாது பணம் பெறப்பட வேண்டிய திகதிக்கே பெறப்பட்டதாகக் கருதி வட்டி கணிப்பிடப்பட்டிருந்தது. இதனால் பெறப்பட்டிராத பணத்திற்காக நிதியத்தில் இருந்து வட்டிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது.

### 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :

3.1 ***நிதிசார் விளைவுகள்.***- சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 974,530,714 மிகையான அதேவேளை ஒதுக்கீட்டின் பின்னர் நிதிசார் விளைவு ரூபா 8,250,877 மிகையாகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் நிதிசார் விளைவு ரூபா 864,186,258 ஆன மிகையாக இருந்த அதேவேளை ஒதுக்கீட்டின் பின்னர் நிதிசார் விளைவு ரூபா 1,219,923 ஆன மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டின் பின்னரான நிதிசார் விளைவு ரூபா 7,030,954 ஆன முன்னேற்றத்தைக் காண்பித்தது.

3.2 ***அங்கத்துவக் கணக்குகளில் உள்ள மீதிகள் பங்களிப்பாளர்களுக்கு அறிவித்தல்.***- அரசாங்க சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவுற்றதை அடுத்து ஓய்வூதியப் பணம் பணிப்பாளரால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர்களின் கணக்குகளில் உள்ள மீதி பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். 2004, திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர்களின் கணக்குகளில் உள்ளவாறு இந்நிதியத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 173,002 ஆனபோதிலும், 35,000 பொலிஸ் துணைச்சேவை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 2004, திசெம்பர் 31 வரையான மீதி தயாரிக்கப்பட்டுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அறவீட்டுப் பதிவேடு கிடைக்கப்பெற்றிராமையாலும் ஒவ்வொரு பங்காளிகள் தொடர்பாகவும் வெவ்வேறு கணக்குகள் நாளதுவரையாகப் பேணப்பட்டிராமையாலும் பல வருடங்களுக்கு மேலான காலமாக இருந்தே வருடத்தின் இறுதி மீதி அங்கத்தவர்களுக்கு அறிவிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்படும் மற்றும் செயற்படாத அங்கத்தவர்கள் வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் அங்கத்துவப் பதிவேடு நாளதுவரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 ***பாதீட்டுக் கட்டுப்பாடு***.- 2004, மாச்சு 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான பாதீடு 1977, ஓகத்து 16 ஆந் திகதிய 836 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**.- பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது :

(அ) அறவீட்டுப் பதிவேடு பெறுதல்

(ஆ) பங்களிப்புக் கட்டணம் பெறுதல்

(இ) காசேடு உட்பட பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணல்

(ஈ) பிழையான வரவு மற்றும் செலவு மீதிகள் தீர்க்கப்படல்

பீ. ஏ. பேமதிலக,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**2004.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான அரச சேவை ஊழியர் சேமலாப நிதியின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பாக அ. சே. ஊ. சே. நிதிய முகாமைத்துவ சபையின் அவதானிப்பு**

2.1 ***கணக்குகளைச் சமர்ப்பித்தல்***.- அவதானிப்பு தொடர்பாக இணங்குகிறேன்.

2.3 ***கணக்குகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தல் :***

2.3.1 *கணக்காளரின் குறைபாடுகள் :*

(அ) முந்தைய வருடங்களிலிருந்து கணக்குகளைத் தயாரிக்கும்போது வட்டிக்கான வரித்தொகையானது, உண்மையில் வட்டித்தொகை பெறப்பட்ட வருடத்திலேயேதான் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. இந்நிதி, இணைந்த நிதியினாலேயே தோற்றுவிக்கப்பட்டுள்ளதனால் இணைந்த நிதியில் இருந்து சம்பளம் பெறுவோரினை உள்ளடக்கிய இந்நிதி, வருமான வரியில் இருந்து விலக்குப்பெற வேண்டியுள்ளதால் இதுபற்றி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு, அத்தகையதோர் வரிவிலக்கொன்றை எதிர்பார்த்து இறுதிக் கணக்கைத் தயாரிக்கும்போது கிடைக்கவேண்டிய வட்டித்தொகைக்கு வரியொன்றை வேறாக்குதல் கிடையாது என்பதை அறியத்தருகிறேன்.

(ஆ) 2003 ஆம் வருடத்தில் கிடைக்கவேண்டிய இந்த முதலீடு தொடர்பான வட்டி அனுமதிப்பத்திரம் 2004 ஆம் வருடத்திலேயே கிடைக்கப்பெற்றுள்ளது. எனினும் 2003 ஆம் வருடத்தில் கணக்குகளைத் தயாரிக்கும்போது ரூபா 5093400 (முழு அளவு) கிடைக்கவேண்டிய வட்டியாக, 2003 ஆம் வருட வருமானச் செலவுக் கணக்கைத் தயாரிக்கும்போது வருடத்தின் இலாபமாக செவ்வையாக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் வருடத்திற்கான தொகை 2004 ஆம் வருடத்தின் வருமானச் செலவுக் கணக்கிற்குச் செவ்வைப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டிக்குரிய வரி மேலே 2.3.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செவ்வையாக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறேன். அதனால் இவ்வவதானம் பற்றி இணங்க முடியாதுள்ளது.

(இ) பிழையான வரவு செலவு தொடர்பாக தனியானதோர் பதிவேடு பேணப்படாவிடினும் ஒவ்வொரு வருட மீதியும் தயாரிக்கப்பட்டிருக்கும் முறை பற்றி விளக்கமான செவ்வையாக்கற் கணக்கொன்று நிறைவுறுத்தற் கணக்காக 2002 ஆம் வருடம் வரை ஒவ்வொரு வருடத்திற்காகவும் பிரதான பேரேட்டில் குறிப்பிடப்பட்டு பேணப்பட்டுள்ளது. இதனால் வேறொரு பதிவேடு தயாரிக்கப்படவில்லை. 2003, 2004 ஆம் வருடங்களுக்கான விளக்கமான செவ்வையாக்கற் கணக்கின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதோடு 2004.12.31 ஆந் திகதிக்கான பிழையான வரவு செலவு மீதிகளுக்கு வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்ட காலங்களுக்குரிய ஆய்வறிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு I, II, III, IV)

இம்மீதிகளைச் சரி செய்யும் நோக்கில் தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமும் உரிய திணைக்களங்களுக்கும் அமைச்சுகளுக்கும் அறிவிக்கப்பட்டும்கூட உரிய நிறுவனங்கள் எதுவித பதிலும் அறிவிக்கப்படவில்லை என்பதையும் அறியத்தருகிறேன்.

2.3.2 ***வரவு செலவு அறிக்கைகளைத் தருவித்தல்.***- அவதானிப்பு பற்றி இணங்குகிறேன்.

2004 ஆம் ஆண்டில் இருந்து அ. சே. ஊ. சே. நிதி தொடர்பான சகல கொடுப்பனவுகளும் காசோலை மூலம் இத்திணைக்களத்தினால் செலுத்தப்படுவதனால் செலவு விபரங்கள் தருவிக்கப்படுவதில்லை. சேமலாப நிதிக்கு வைக்கப்படும் வரவு விபரங்களையும் அனுப்பிவைக்குமாறு சுற்றுநிருபங்கள், கடிதங்கள், தொலைபேசி மூலம் திணைக்களங்கள், அமைச்சுக்களுக்கு அறிவித்திருந்தும் அவ்வாறான விளக்கங்கள் அனுப்பப்படுவதில்லை. அத்தோடு காசோலைகளோடு அல்லது வேறு முறையிலான பட்டியலொன்று உட்படுத்தப்பட்டு உரிய மீதியை வரவு வைப்பது தொடர்பான விளக்கம் மாதாந்தம் அனுப்பி அறிவிக்கப்படுகின்றது. அந்தப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மீதிகள் ஒப்பீடு நடைபெறுகின்றது.

2.3.3 ***அங்கத்துவ நிதி செலுத்துதல்.***- சகல கொடுப்பனவுகளும் அறவீட்டுப் பட்டியல் அடிப்படையில் நடைபெறுகின்றது. அறவீட்டுப் பட்டியலும் அனுப்பாத நிறுவனங்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்போது அவ்வருடத்தினுள் அங்கத்துவப் பணம் அறவிடப்பட்டிருந்தால் அதுபற்றி சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வரவு அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகள் செய்யப்படும். காரணம் அறவீட்டுப்பட்டியல் வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்படுவதனாலாகும்.

எவ்வாறாயினும் அறவீட்டுப் பட்டியல் பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து மாத்திரம் உறுதிசெய்யப்பட்ட வரவு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்காக சேமலாப நிதியின் செயலாளர் மற்றும் கணக்காளருக்கு அங்கீகாரம் வழங்குதல் 2005.08.24 ஆந் திகதி சேமலாப நிதி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

2.3.4 ***கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை.***- காசோலைகள் மூலம் நிதியத்துக்கு உறுப்புரிமை நிதி வழங்கும் நிறுவனங்கள் சம்பந்தமாக வேறான பதிவேடுகள் பேணப்படுவதோடு அதுபற்றி மாகாண சபை நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகள் உள்ளடங்கும். ஒவ்வொரு மாகாண சபைக்கும் உரிய நிறுவனங்கள் வெவ்வேறாக இப்பட்டியலில் குறிப்பிடப்படுகின்றன. நிதியத்துக்கு அங்கத்துவப் பணம் கிடைக்குமாயின் மாத்திரம் அந்நிறுவனத்துக்கான விபரங்கள் பதிவுசெய்யப்படும்.

அதேபோன்று சகல அங்கத்துவ நிதிகளும் கிடைப்பது தொடர்பாக வெவ்வேறான 192 கோவைகள் விடய எழுதுனர்களினால் பேணப்படுவதுடன் இக்கோவைகள் நாளாந்த கடமை தொடர்பான செயற்பாடுகளுக்குத் தேவைப்படுவதனால் 96 தொகுதி மட்டும் கணக்காய்வுக்குட்படுத்தப்படும்போது ஏனைய கோவைகள் தேவைப்படும்போது கணக்காய்வுக்குட்படுத்தப்படும். திரட்டிய நிதி தவிர்ந்த வேறு நிதியங்களினால் சம்பளம் பெறும் வெளிநாட்டு செயற்றிட்டங்கள் ஆகிய நிறுவனங்கள் மட்டும் 12& மான பங்குகளைப் பெறுகின்றன. 2004 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை மொத்தப் பண வரவில் 0.5& எனும் சிறியதோர் தொகையாகும் என்பதை அறியத்தருகிறேன்.

2.3.5 ***உறுப்புரிமைப் பணம் செலுத்தும்போது வழங்கப்படும் வட்டி.***- மாகாண சபைக்குட்பட்ட நிறுவனங்களினால் செலுத்தப்படும் அங்கத்துவ நிதி தொடர்பாக பேணப்படும் கோவை மற்றும் பதிவேடுகளின் அடிப்படையில் பட்டியலைப் பயன்படுத்தி நிதியத்தில் இருந்து கொடுப்பனவுகள் வழங்கப்படும். அதேபோன்று நிதியத்துக்கு அங்கத்துவப் பணம் அனுப்பப்பட்ட முறை பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் நிதி கோரப்படும்போது வேறோர் அறிக்கை தயாரித்து வழங்கப்படும். எனவே நிதியத்துக்குக் கிடைக்காத நிதி பற்றி நிதியத்திலிருந்து வட்டி வழங்கப்பட மாட்டாது என அறிவிப்பதோடு அரச ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்திற்கேற்ப அங்கத்தவர்களின் கணக்கில் வைப்பில் இருக்கும் மீதியை அடிப்படையாகக் கொண்டு வட்டி வழங்கப்படும்.

3. ***நிதி மற்றும் கண்காணிப்புப் பற்றிய மீளாய்வு***

3.1 ***நிதிப் பெறுபேறுகள்***

3.2 ***அங்கத்துவக் கணக்குகளின் மீதிகளை அங்கத்தவர்களுக்கு அறிவித்தல்.***- தற்போதைக்கு 1999 ஆம் ஆண்டு வரையிலான மீதிகள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளதோடு, புதிய கணனி வேலைத்திட்ட மாற்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதோடு எதிர்காலத்தில் சகல அங்கத்தவர்களுக்குமான தரவுகள் உள்ளடக்கிய மீதிகளை அறிவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் அறியத்தருகிறேன். அவதானிப்புக்கள் பற்றி இணங்குகிறேன்.

கே. ஏ. திலகரத்ன,
அரச சேவை ஊழியர் சேமலாப நிதிய
முகாமைத்துவ சபையின் தலைவரும்,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமும்.

2-185

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"ஸ்டாலைட் லின் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2003.02.27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஸ்டாலைட் லின் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின்கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஸ்டாலைட் லின் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

என் (பிவிஎஸ்) 33070,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2008, சனவரி 7 ஆந் திகதி.

2-181

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"மெடி பாமசூட்டிகல்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2004.12.17 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "மெடி பாமசூட்டிகல்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின்கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "மெடி பாமசூட்டிகல்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

என் (பிவிஎஸ்) 40002,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2008, சனவரி 7 ஆந் திகதி.

2-182

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"லைப் டைம் பார்ட்னர்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2005.10.26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "லைப் டைம் பார்ட்னர்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின்கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "லைப் டைம் பார்ட்னர்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

என் (பிவிஎஸ்) 43751,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2008, சனவரி 7 ஆந் திகதி.

2-183

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

*"ஹோம்பெக் ட்ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்*

*கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.02.09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஹோம் பெக் ட்ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின்கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஹோம் பெக் ட்ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து தனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.*

*டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி,*
*கம்பனிகள் பதிவாளர் அதிபதி.*

*என் பிவிஎஸ் 44955,*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*"சமாகம் மெதுர",*
*இல. 400, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2008, சனவரி 7 ஆந் திகதி.*

*2-184*

---

**ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*அந்திர பந்துகே ஆரியசேன மற்றும் வாஹும்புரகே விமலாவதி- (எம்பிலிப்பிட்டிய கிளை)*

*ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2007, ஒற்றோபர் 24 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-*

*"அந்திர பந்துகே ஆரியசேன மற்றும் வாஹும்புரகே விமலாவதி என்போர் கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். கொஸ்கொடகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, பெப்புருவரி 3 ஆந் திகதிய 190 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், அத்துடன் 2006, ஓகத்து 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது இரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்றறுபத்தெட்டு ரூபா ஐந்து சதம் (ரூ. 2,56,868.05) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 190 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்றறுபத்தெட்டு ரூபா ஐந்து சதம் (ரூ. 2,56,868.05) கொண்ட பணத்தொகையை, 2006, செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."*

**அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலொன்ன கோறளையின் தியபொத்தகம்பற்றுவில் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை எல்லைகளுக்குள் எம்பிலிப்பிட்டியவின் உடகம கிராமத்தில் கொங்கட்டுவ என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் "உக்வத்தை" (ஆனால் மிகச் சரியாக "கொங்கஹவத்தை மறுபெயர் உக்வத்தை") என அழைக்கப்படுவதும் மற்றும் அறியப்படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. ஜி. தர்மரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 23.08.1999 ஆந் திகதிய 1296 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 2 இன் எல்லைகள்- வடக்கு : உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. ஜி. தர்மரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 402 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 ; கிழக்கு : உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. ஜி. தர்மரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 402 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 ; தெற்கு : 402 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 ; அத்துடன் மேற்கு : 402 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 4 (வீதி) அத்துடன் இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் ஜி 193/ 180 என்னும் தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 1296 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் மூன்று றூட்டுக்கள் இருபத்தேழு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 27.5பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

*2-277/ 1*

**ஹட்டன் நாஷனல் வங்கி PLC**

(ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

